# தமிழ்த் தென்றல்

## வாசகம்

### இரண்டாம் புத்தகம்





TB
031 (2)
N58
135564.


பப்ளிஷிங் ஹவுஸ்

பகோணம்

# தமிழ்த் தென்றல் வாசகம்

## இரண்டாம் புத்தகம்

(புதிய பாடத் திட்டத்தைத் தழுவி எழுதப்பட்டது)

ஆசிரியர்:

வித்துவான் R. ஸ்ரீநிவாசன்

தமிழாசிரியர், தேசிய உயர்நிலைப்பள்ளி, மாயூரம்

ஸி. வி. கே. பப்ளிஷிங் ஹவுஸ்,

33 பச்சையப்ப முதலித் தெரு,

கும்பகோணம்.

பதிப்புரிமை]

[விலை 41 ந.பை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 24 NOV 1961 MADRAS

MADRAS RECORD OFFICE MADRAS

311/46

இரண்டாம் பதிப்பு—1958

Printed on 24 lbs. Double Crown White Printing.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
சென்னை-600 008
135564

ஜெமினி அச்சகம், 28 மடத்துத் தெரு, கும்பகோணம்.

# முன்னுரை

'இளமையிற் கல்' என்பது ஔவையாருடைய அருள்வாக்கு. பள்ளிகூடத்துக்கு வரும் முன்பே குழந்தைகட்கு ஓரளவு பேசத் தெரியும். ஆனால் அவற்றின் பேச்சுக் கொச்சையாக மழலை கலந்து இருக்கும். இதனைத் திருத்தி நல்ல முறையில் பேசவும் எழுதவும் செய்வதே ஆசிரியர் கடமை யாகும்.

குழந்தைகள் நன்கு பேசவும், பொருளுணர்ந்து படிக்கவும், அழகுற எழுதவும் கற்பித்தலே ஆரம்பக் கல்வியின் நோக்கமாகும். அதற்கேற்ற முறையில் அரசாங்கத்தார் 25—12—57 அன்று புதிய பாடதிட்டம் ஒன்றைத் தயாரித்து வெளியிட்டுள்ளனர். அப்புதிய பாட திட்டத்தைத் தழுவி, "**தமிழ்த் தென்றல் வாசகம்**" என்னும் இந்நூல் வரிசை எழுதப் பெற்றுள்ளது.

செல்வச் சிறுவர்களும் சிறுமியரும் இந் நூலினைக் கற்றுப் பயன் அடைவார்களாக.

இங்ஙனம்
பதிப்பகத்தார்

# அட்டவணை.


| | | | |
|---|---|---|---|
| 1. | செய்யுட் பகுதி | ... | |
| | கொன்றைவேந்தன் | ... | 3 |
| | உலக நீதி | ... | 6 |
| 2. | இயற்கைத் தோற்றம் | ... | 10 |
| 3. | குரல்கள் | ... | 11 |
| 4. | பாப்பாப் பாட்டு | ... | 13 |
| 5. | காக்கையின் தந்திரம் | ... | 15 |
| 6, | நிறங்கள் | ... | 17 |
| 7. | தென்னை மரம் | ... | 19 |
| 8. | மயில் | ... | 22 |
| 9. | புத்தர் | ... | 25 |
| 10. | சிலந்தி | ... | 27 |
| 11. | தீபாவளி | ... | 30 |
| 12. | கர்வம் கூடாது | ... | 32 |
| 13. | தொழிலாளர்கள் | ... | 35 |
| 14. | வீட்டு மிருகங்கள் | ... | 38 |
| 15. | காட்டு மிருகங்கள் | ... | 41 |
| 16. | நல்ல பையன் | ... | 44 |
| 17. | நிலாப் பாட்டு | ... | 46 |
| 18. | ஆகாய விமானம் | ... | 48 |
| 19. | பொறுமைக் கிளி | ... | 51 |
| 20. | சுவைகள் | ... | 53 |
| 21. | தேகப் பயிற்சி | ... | 55 |
| 22. | முத்துப் புலவர் | ... | 57 |
| 23. | கோழிப் பாட்டு | ... | 58 |
| 24. | தோட்ட வேலைகள் | ... | 61 |
| 25. | கரடியும் அழகியும் | ... | 63 |
| 26. | புதிய நாணயங்கள் | ... | 66 |
| 27. | குரங்கும் பூனையும் | ... | 68 |
| 28. | நரி | ... | 72 |
| 29. | அற்பம் அற்பம் அல்ல | ... | 73 |
| 30. | நான் யார் | ... | 75 |

# தேசீய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாஹே
தவசுப ஆசிஷ மாஹே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்

# தேசீய கீதம்

(பொருள்)

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும்
ஆட்சிசெலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாபையும் ஸிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்

திராவிடத்தையும் ஒரிஸ்ஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக்கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப ஒலியில்
கலக்கிறது;

இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின்புகழைப் பாடுகின்றன;

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

# கொன்றைவேந்தன்

"கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே"

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு.
6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
7. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
8. ஏவா மக்கள் மூவாமருந்து,
9. ஐயம் புகினும் செய்வன செய்.
10. ஒருவனைப் பற்றி ஓரகத் திரு.
11. ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்.
12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு,
13. கிட்டா தாயின் வெட்டென மற.

14. கீழோ ராயினும் தாழ உரை

15. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை

16. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி

17. சீரைத் தேடின் ஏரைத் தேடு

18. சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்

19. சூதும் வாதும் வேதனை செய்யும்

20. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்

21. தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை

22. தாய்சொல் துறந்தால் வாசகம் இல்லை

23. திரைகடல் ஓடியும் திரவியந் தேடு

24. தீராக் கோபம் போராய் முடியும்

25. தேடா தழிக்கிற் பாடாய் முடியும்

26. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது

27. நல்லிணக்கம் அல்லது அல்லற் படுத்தும்

28. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி

29. பாலோ டாயினுங் காலம் அறிந்துண்

30. புலையும் கொலையும் களவும் தவிர்

31. மருந்தே யாயினும் விருந்தோடு உண்

32. மாரி அல்லது காரியம் இல்லை

33. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

34. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்

35. மேழிச் செல்வம் கோழை படாது

36. வானம் சுருங்கின் தானம் சுருங்கும்

37. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு

38. வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை

39. வையந் தோறும் தெய்வம் தொழு

40. ஓதாதார்க்கு இல்லை உணர்வொடும் ஒழுக்கம்,

—ஔவையார்

# உலக நீதி

1 ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்;
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்;
மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்;
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்கவேண்டாம்.

2 நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்;
நிலையில்லாக் காரியத்தை நிறுத்தவேண்டாம்;
நஞ்சுடனே ஒருநாளும் பழகவேண்டாம்;
நல்லிணக்கம் இல்லாரோடு இணங்கவேண்டாம்.

3 மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்;
மாற்றானை உறவென்று நம்பவேண்டாம்;
தனம்தேடி உண்ணாமல் புதைக்கவேண்டாம்;
தருமத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.

4 குற்றமொன்றும் பாராட்டித் திரியவேண்டாம்;
கொலைகளவு செய்வாரோடு இணங்கவேண்டாம்;
கற்றவரை ஒருநாளும் பழிக்கவேண்டாம்;
கற்புடைய மங்கையரைக் கருதவேண்டாம்.

5 வீழாத படுகுழியில் வீழவேண்டாம்;
வெஞ்சமரில் புறங்கொடுத்து மீளவேண்டாம்;
தாழ்வான குலத்துடனே சேரவேண்டாம்;
தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்லவேண்டாம்

6 வார்த்தைசொல்வார் வாய்பார்த்துத் திரியவேண்டாம் ;
மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம் ;
மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம் ;
முன்கோபக் காரரோடு இணங்கவேண்டாம்.

7 சேராத இடந்தனிலே சேரவேண்டாம் ;
செய்தநன்றி ஒருநாளும் மறக்கவேண்டாம் ;
ஊரோடும் குண்டுணியாய்த் திரியவேண்டாம் ;
உற்றாரை உதாசினங்கள் சொல்லவேண்டாம்.

8 கண்ணழிவு செய்துதுயர் காட்டவேண்டாம் ;
காணாத வார்த்தையைக் கட்டுரைக்கவேண்டாம் ;
புண்படவே வார்த்தைகளைச் சொல்லவேண்டாம் ;
புறஞ்சொல்லித் திரிவாரோடு இணங்கவேண்டாம்.

9 திறம்பேசிக் கலகமிட்டுத் திரியவேண்டாம் ;
தெய்வத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம் ;
இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம் ;
ஏசலிட்ட உற்றாரை நத்தவேண்டாம் ;

10 கூறுக்கி ஒருகுடியைக் கெடுக்கவேண்டாம் ;
கொண்டைமேற் பூத்தேடி முடிக்கவேண்டாம் ;
வீணான தெய்வத்தை இகழவேண்டாம் ;
வெற்றியுள்ள பெரியோரை வெறுக்கவேண்டாம்.

—உலகநாதனார்

**கொன்றைவேந்தன் :** இந்நூலைப் பாடியவர் ஔவையார் ஆவார். இந்நூலில் 91 பாடல்கள் உள்ளன. ஔவையார் கம்பர் காலத்தில் வாழ்ந்தார். இவர் ஆத்தி சூடி, மூதுரை, நல்வழி முதலிய நூல்களையும் பாடி யுள்ளார்.

**அருஞ்சொற்பொருள் :**

| | | | |
|---|---|---|---|
| தேட்டை | —செல்வம் | மூவாமருந்து | —தேவஅமிர்த |
| ஐயம் | —பிச்சை | உண்டி | — உணவு |
| அகம் | —வீடு | ஔவியம் | — பொறாமைப் பேச்சு |
| ஆக்கம் | —செல்வம் | தாழ | — பணிவோடு |
| சுற்றம் | —உறவினர் | சீர் | — சிறப்பு |
| வாது | —வாதிடுதல் | தேம்பி | — வருந்தி |
| திறை | —அலை | திரவியம் | — செல்வம் |
| பாடாய் | —துன்பமாய் | ஊண் | — உணவு |
| இணக்கம் | —நட்பு | அல்லல் | — துன்பம் |
| புலை | —மாமிசம் உண்ணல் | களவு | — திருட்டு |
| விருந்து | —விருந்தினர் | மாரி | — மழை |
| மேழி | —உழுது பயிர் செய்தல் | வானம் | — மழை |
| சிந்தை | —மனம | கள்ளம் | — திருட்டு |
| வையம் | —ஊர் | ஓதாதார் | — படிக்காதார் |

**உலகநீதி :** இந்நூலைப் பாடியவர் உலகநாதனார் என்பவர் ஆவார். உலகநீதி சிறு குழந்தைகள் எளிதில் உச்சரிக்குமாறு பாடப் பெற்றுள்ளது.

**அருஞ்சொற்பொருள் :**

| | | | |
|---|---|---|---|
| ஓதாமல் | —படிக்காமல் | பொல்லாங்கு | —தீமைதரும் சொற்கள் |
| நஞ்சு | —விஷம் | | |
| மாற்றான் | —பகைவன் | இணக்கம் | —நட்பு (சேர்தல்) |
| கருத | —நினைக்க | தனம் | —செல்வம் |
| புறங்கொடுத்து | —முதுகுகாட்டி | வெஞ்சமர் | —கொடிய போர் |
| உதாசீனம் | —இகழ்ச்சிப் பேச்சு | குண்டுணி | —பயனற்றவன் |
| புறம் | —கோள் | கண்ணழிவு | —அன்பு |
| ஏசல் | —இகழ்ச்சி | திறம் | —திறமை |
| கூறு | —பிரிவு | நத்த | —சேர |
| வீறு | —பெருமை | கொண்டை | —கூந்தல் |



# 2. இயற்கைத் தோற்றம்

1. அண்ணா இங்கே வாராய்!
அருமைத் தோற்றம் பாராய்!
வண்ண மலர்களின் வடிவழகைக்
கண்டு மகிழ்ந்திட வாராய்!

2. கனிகள் தந்திடும் மரமோர்பால்!
கதிரவன் எழும்பும் அழகோர்பால்
இனிமை தந்திடும் பூங்கொடிகள்
ஈந்திடும் மலர்களின் மனமோர்பால்

3. இன்பமாய்ப் பாடிடும் குயிலோர்பால்
இனிமையாய் ஆடிடும் மயிலோர்பால்
அன்பாய்க் கொஞ்சிடும் கிளியோர்பால்
அழகாய் ஓடிடும் அணிலோர்பால்

4. வண்டுடை தாமரை குவளைகளும்
வண்ணம் காட்டிடும் அழகோர்பால்
உண்டிட நன்னீர் கொடுத்துதவி
குளுமை செய்திடும் குளமோர்பால்

—நந்திதாசன்

## 3. குரல்கள்

| | |
|---|---|
| சிங்கம் | கர்ஜிக்கும் |
| புலி | உறுமும் |
| யானை | பிளிறும் |
| பன்றி | உறுமும் |
| நாய் | குரைக்கும் |
| பூனை | சீறும் |
| ஆடு | கத்தும் |
| குதிரை | கனைக்கும் |
| பசு | கதறும் |
| எருது | முக்காரம் போடும் |
| நரி | ஊளையிடும் |
| கழுதை | கத்தும் |
| எலி | கீச்சிடும் |
| குரங்கு | கீச்சிடும் |
| சேவல் | கூவும் |
| பெட்டை | கொக்கரிக்கும் |
| மயில் | அகவும் |

| | |
|---|---|
| குயில் | கூவும் |
| காகம் | கரையும் |
| ஆந்தை | அலறும் |
| தவளை | கத்தும் |
| வண்டு | ரீங்காரம் செய்யும் |

வினாக்கள் :

1. யானையின் குரலுக்குப் பெயர் என்ன ?
2. குதிரையின் குரலுக்குப் பெயர் என்ன ?
3. நரியின் குரலுக்குப் பெயர் என்ன ?
4. மயிலின் குரலுக்குப் பெயர் என்ன ?

# 4. பாப்பாப் பாட்டு



(1) ஓடி விளையாடு பாப்பா!—நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா!—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா!

(2) பாலைப் பொழிந்துதரும் பாப்பா!—அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா!
வாலைக் குழைத்துவரும் நாய்தான்—அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா!

(3) காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்லபாட்டு
மாலைமுழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா!

(4) பொய்சொல்லக் கூடாதுபாப்பா!—என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா!
தெய்வம் நமக்குத்துணை பாப்பா!—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா!

(5) துன்பம் நெருங்கிவந்த போதும்—நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா!
அன்பு மிகுந்ததெய்வ முண்டு—துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா!

(6) உயிர்களிடத்தில்அன்பு வேணும்—தெய்வம்
உண்மையென்றுதா னறிதல்வேணும்
வயிரமுடையநெஞ்சு வேணும்—இது
வாழும்முறைமையடி பாப்பா!

—பாரதியார்

புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| ஒய்ந்து | வழக்கம் | சோர்ந்து |
| வைதல் | | அறிதல் |
| பொழிந்து | புறஞ்சொல் | நெஞ்சு |
| குழைத்து | துணை | முறைமை |
| கனிவு | தீங்கு | |

வினுக்கள் :

1. மனிதர்க்குத் தோழன் எது?
2. காலையிலும், மாலையிலும் என்ன செய்யவேண்டும்?
3. நாம் எவற்றைச் சொல்லக்கூடாது?
4. "வாழும் முறைமை" என்று பாரதியார் எவற்றைச் சொல்லுகிருர்?

# 5. காக்கையின் தந்திரம்



மேலே உள்ள படங்களைப் பார். ஒவ்வொன்றையும் நன்றாய்க் கவனி. கொடுத்துள்ள சில சொற்களை வைத்துக் கொண்டு கதையைச் சொல்லு.

**படம் 1:** நாய்——ஒரு நாள்——எலும்புத் துண்டு——ஒரு காக்கை——கவர நினைத்தல்.

**படம் 2:** மற்றொரு காக்கை—— இரண்டும் ——கூடிப் பேசுதல்——திட்டம்

**படம் 3:** ஒரு காக்கை—— நாய் வால் —— கொத்தி இழுத்தல்——வலி——கோபம்——

**படம் 4:** அடிக்கடி கொத்துதல் —— வலி பொறுக்கவில்லை——காக்கைமேல்——பாய்தல்——

**படம் 5:** காக்கை பறந்து போதல்——நாய் திரும்புதல்——மற்றொரு காக்கை எலும்பைக் கவர் தல்——மகிழ்ச்சியோடு பறத்தல்——நாய் ஏமாறு தல்——தந்திரம் பலித்தல்.

**புதிய சொற்கள் :**

| | | | |
|---|---|---|---|
| சமயம் | திட்டம் | அடிக்கடி | ஏமாற்றம் |
| எலும்பு | நாய் வால் | பாய்தல் | பலித்தல் |
| துண்டு | கொத்துதல் | பறந்து | காக்கை |
| கவர | வலி | திரும்புதல் | இழுத்தல் |
| கூடிப்பேசுதல் | கோபம் | மற்றொரு | |

**வினாக்கள் :**

1. நாய் என்ன செய்துகொண்டிருந்தது ?
2. காக்கை என்ன நினைத்தது ?
3. காக்கை என்ன தந்திரம் செய்தது ?
4. நாய் ஏமாந்தது ஏன் ?
5. இக்கதையால் நீ அறியும் நீதி யாது ?



# 6. நிறங்கள்

படத்தில் சில காய்கறிகளையும், பழங்களையும் பார்க்கிறோம். அவற்றின் நிறங்களைப் பற்றித் தெரிந்துகொள்வோம்.

1. வாழைப் பழம்: வாழைப் பழத்தின் நிறம் மஞ்சள் ஆகும்.

2. மாதுளம்பழம்: மாதுளம் பழத்தைப் பிளந்து பார். அதனுள் பல முத்துக்கள் உள்ளன. அவற்றின் நிறம் சிவப்பு ஆகும்.

3. திராட்சைப் பழம்: திராட்சை கொத்துக் கொத்தாக இருக்கும். திராட்சையில் இரு வகைகள் உண்டு. ஒரு வகை பச்சையாக இருக்கும். மற்றொன்று கருப்பாக இருக்கும்.

4. கத்தரிக் காய்: கத்தரிக் காய் செடியில் காய்க்கும். அதற்கு நீண்ட காம்பு உண்டு. கத்தரிக் காய் ஊதா நிறமாக இருக்கும். சில கத்தரிக்காய்கள் வெண்மையாகவும் இருக்கும்.

5. பேரீச்சம் பழம்: நாம் பேரீச்சம் பழத்தை விரும்பி வாங்கி உண்கிறோம். அதன் நிறம் பழுப்பு ஆகும்.

6. மணித்தக்காளிப் பழம்: நாம் மணித்தக்காளிச் செடியை எங்கும் பார்க்கலாம். அதன் கீரையைக் கறி சமைப்பார்கள். காயை வற்றல் போடுவார்கள். அதன் பழம் நீல நிறமாகும்.

புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| காய்கறி | கொத்து | ஊதா | கீரை |
| மஞ்சள் | பச்சை | வெண்மை | வற்றல் |
| பிளந்து | கருப்பு | பேரீச்சை | நீலம் |
| முத்துக்கள் | வகை | பழுப்பு | |
| சிவப்பு | காம்பு | மணித்தக்காளி | |

வினாக்கள் :

1. மாதுளம் பழத்தினுள் என்ன இருக்கும்?
2. திராட்சையில் எத்தனை வகைகள் உண்டு?
3. மணித்தக்காளிச் செடி எவ்வாறு பயன்படுகிறது?



# 7. தென்னை மரம்

1. தென்னை மரம் மிகவும் உபயோகமான மரம். அது மணற்பாங்கான இடங்களில் செழிப்பாக வளரும். அதை நாம் பல இடங்களில் காணலாம்.

2. தென்னை மரம் உயரமாக வளரும். அதன் உச்சியில் மட்டைகள் உள்ளன. மட்டைகளுக்கு நடுவில் தேங்காய்களைக் காணலாம். தேங்காய்கள் குலை குலையாகக் காய்க்கும். தென்னை மரத்திற்குக் கிளைகள் இல்லை.

3. தென்னம்பாளையிலிருந்து பிஞ்சுகள் உண்டாகின்றன. அவைகட்குக் "குறும்பை" என்று பெயர். தென்னையின் இளங்காய்களுக்கு

"இளநீர்" என்று பெயர். தென்னை மட்டையின் இரு பக்கங்களிலும் நீண்ட ஓலைகளைக் காண லாம்.

4. இளநீர் பருகுவதற்கு இனிப்பாய் இருக் கும். தாகத்தைத் தணிக்கும். தேங்காய்க்குள் வெண்மையான பருப்பைக் காணலாம். அது கறி சமைக்க உதவும். முற்றிய பருப்பைக் காய வைத்து எண்ணெய் எடுப்பார்கள். அதற்குத் தேங்காய் எண்ணெய் என்று பெயர்.

5. தென்னை ஓலைகளால் கீற்று முடையலாம். கீற்றுகள் கூறை வேயவும், பந்தல் அமைக்கவும் உதவும். தென்னையின் அடிமரம் வீடு கட்ட உதவும்.

6. தேங்காயின் மேல் அடர்த்தியான நாரு டைய மட்டை உள்ளது. அதனை நீக்கிவிட்டால் உள்ளே கெட்டியான ஓட்டுடன் தேங்காயைக் காணலாம். தேங்காயின் ஓடு கொட்டாங்கச்சி எனப்படும்.

7. தேங்காயின் மேலுள்ள மட்டைக்கு 'உரி மட்டை' என்று பெயர். உரிமட்டை அடுப்பு எரிக்க உதவும். உரிமட்டையில் உள்ள நாரினால் கயிறு திரிக்கலாம், பாய்கள் முடையலாம், மிதி யடிகள் செய்யலாம்.

8. தென்னையின் கன்றுக்குத் 'தென்னம் பிள்ளை' என்று பெயர்.

புதியசொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| உபயோகம் | தேங்காய் | இளநீர் | தணிக்கும் |
| மணல் | குலைகுலையாய் | இளங்காய் | பருப்பு |
| செழிப்பாக | கிளைகள் | பாளை | எண்ணெய் |
| உச்சி | பிஞ்சு | பருகுதல் | கீற்று |
| மட்டை | குரும்பை | தாகம் | பந்தல் |
| அடர்த்தி | நார் | ஓடு | கொட்டாங்கச்சி |
| உரிமட்டை | கயிறு | முடைதல் | மிதியடி |

வினாக்கள் :

1. தேங்காய் எப்படிக் காய்க்கும் ? எங்கே காய்க்கும்?
2. தேங்காய்ப் பருப்பின் உபயோகத்தைக் கூறு.
3. தேங்காய் நாரினால் என்ன உபயோகம்?
4. தென்னையின் கன்றுக்குப் பெயர் என்ன?



# 8. மயில்

1. மயில் மிக அழகிய பறவை. அது காடுகளிலும், மலைகளிலும் வசிக்கும். அது நெல், புழு, பூச்சிகள் முதலியவற்றைத் தின்னும்.

2. மயிலுக்கு நீண்ட வால் உண்டு. அதனைத் 'தோகை' என்கிறோம். அது பார்ப்பதற்கு வெகு அழகாக இருக்கும். தோகையில் பச்சை, நீலம், மஞ்சள் என்ற மூன்று நிறங்கள் உள்ளன.

3. ஆண் மயிலின் வால் நீண்டு இருக்கும். அதன் தலையில் கொண்டை ஒன்று உண்டு. பெண் மயிலுக்கு வால் குட்டையாக இருக்கும். பெண்

மயிலுக்கு உச்சிக்கொண்டை இல்லை. மயில், மேகத்தைக் கண்டால் தன் தோகையை விரித்துக் கொண்டு ஆடும். அது ஆடுகின்ற காட்சி பார்ப்பவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். மயில் தோகையில் பெரும் பெரும் புள்ளிகள் இருப்பதை ஆடும்போது காணலாம். அவைகளுக்குக் கண்கள் என்று பெயர். மயில் மிக நேர்த்தியாக ஆடும் தன்மை உடையது.

4. மயிலுக்கு நீளமான சிறகுகள் இல்லை. ஆதலால் அது உயரப் பறப்பதில்லை. அது மண்டபங்களிலும், மரக்கிளைகளிலும் பறந்து சென்று உட்காரும்.

5. மயிலின் கத்தலை 'அகவுதல்' என்பார்கள். மயிலின் அகவல் சத்தம் கேட்க இனிமையாக இராது.

6. மயிலைக் கூண்டில் அடைத்து வளர்க்கிறார்கள். மயிலின் இறகுகளைக்கொண்டு விசிறி கட்டலாம்.

7. மயில், பாம்பைக் கண்டால் விட்டுவிடாது. அதைக் கொத்திக் கொத்தித் துண்டமாக்கிவிடும். ஆதலால் மயிலைக் கண்டால் பாம்பு ஓடிவிடும்.

புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| மலை | உச்சி | சிறகு |
| நெல் | மேகம் | மண்டபம் |

| | | |
|---|---|---|
| தோகை | காட்சி | கத்தல் |
| கொண்டை | நேர்த்தி | அகவுதல் |
| குட்டை | கண்கள் | |

**வினாக்கள் :**

1. மயில் எங்கெங்கு வசிக்கும்?
2. மயில் தோகையில் என்னென்ன நிறங்கள் உள்ளன?
3. ஆண் மயிலுக்கும், பெண் மயிலுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
4. மயிலின் கத்தலுக்குப் பெயர் என்ன?
5. மயிலைக் கண்டால் பாம்பு அஞ்சி ஓடும்—ஏன்?



ஆவணக்காப்பக
சென்னை-600 008.
135564

# 9. புத்தர்

1. உலகில் பல மதங்கள் இருக்கின்றன. அவற்றுள் புத்த மதமும் ஒன்று. புத்த மதத்தை ஏற்படுத்தியவர் கௌதம புத்தர். இவர் கபில வஸ்து என்னும் நகரத்தில் பிறந்தார்.

2. இவருடைய தந்தையார் சுத்தோதனர் என்ற அரசராவார். இவருடைய தாயார் பெயர் மாயாதேவி.

3. இவருக்கு தக்கவயதில் யசோதரை என்ற அரசகுமாரியைத் திருமணம் செய்து வைத்தனர். இவருக்கு இராகுலன் என்ற அழகிய மகன் இருந்தான்.

4. ஒரு நாள் இவர் வெளியில் உலாவச் சென்றார். வழியில் மனிதர்களும், மிருகங்களும்

துன்பப்படுவதைக் கண்டார். துன்பத்திலிருந்து யாவரையும் விடுவிக்க வேண்டும் என்று நினைத்தார்.

5. ஒரு இரவு மனைவியையும் குழந்தையையும் விட்டுவிட்டு காட்டிற்குச் சென்றார். அங்கே கடுந்தவம் புரிந்தார்.

6. ஒரு நாள் கயை என்ற ஊரில் ஒரு மரத்தடியில் அமர்ந்து இருந்தார். அப்பொழுது அவருக்கு ஞானோதயம் ஏற்பட்டது.

7. புத்தர் அது முதல் தாம் கண்ட உண்மைகளை மக்களுக்குப் போதித்து வந்தார்.

உண்மையே பேச வேண்டும்
ஆசையை ஒழிக்க வேண்டும்
உயிர்களைக் கொலை செய்யக்கூடாது

என்பன அவர் போதித்த உண்மைகளாம்.

**புதிய சொற்கள் :**

| | | |
|---|---|---|
| மதங்கள் | கடுந்தவம் | உயிர்கள் |
| நகரம் | அமர்ந்து | புரிந்தார் |
| அரச குமாரி | ஞானோதயம் | சுற்றி |
| போதித்து | விடுவிக்க | கொலை |

**வினாக்கள் :**

1. புத்தருடைய பெற்றோர்கள் யாவர்?
2. புத்தர் காட்டிற்கு ஏன் சென்றார்?
3. புத்தருக்கு ஞானோதயம் எங்கு ஏற்பட்டது?
4. புத்தரது உபதேசங்கள் யாவை?



# 10. சிலந்தி

1. என்னை மேலே படத்தில் பாருங்கள். நான் பூச்சி இனத்தைச் சேர்ந்தவன். என் பெயர் சிலந்தி. எனக்கு எட்டுக் கால்கள் இருக்கின்றன. ஆகையால் என்னை 'எட்டுக்கால் பூச்சி' என்றும் அழைப்பார்கள்.

2. என் உடலில் மூன்று பாகங்கள் உண்டு. உங்களைப்போலவே எனக்கும் தலை உண்டு; மார்பு உண்டு; வயிறு உண்டு. உங்களுக்கு

இரண்டே கண்கள்தான் இருக்கின்றன. ஆனால் எனக்கு இரண்டு வரிசைகளாக எட்டுக் கண்கள் இருக்கின்றன. கண்களுக்கு நடுவில் வாய் இருக்கிறது. என் வாயின் இரு பக்கங்களிலும் தாடைகள் உள்ளன. தாடைகளில் விஷ முட்கள் உள்ளன. அவைகளால் நான் பூச்சிகளைக் குத்திக் கொல்லுவேன்.

3. என்னை நீங்கள் வீடுகளிலும், தோட்டங்களிலும் காணலாம். நான் கூரைகளிலும், ஜன்னல்களிலும், செடி கொடிகளிலும் கூடு கட்டிக்கொண்டு வாழ்வேன்.

4. என் கூடு மிகவும் மெல்லிய நூலால் ஆனது. என் பின்புறத்திலிருந்து வரும் பிசின் போன்ற நீரால் நான் கூட்டைக் கட்டுகிறேன். உங்களால் என் கூட்டைப் போல ஒரு கூடு கட்டமுடியாது.

5. நான் ஏன் கூடு கட்டுகிறேன் தெரியுமா? கூடு கட்டி வைத்தால் அக் கூட்டில் ஈ, கொசு, பூச்சிகள் வந்து உட்காரும். நான் அவைகளைப் பிடித்துத் தின்று உயிர் வாழ்வேன்.

6. என் இனத்தில் ஆண்களைக் காட்டிலும் பெண்களே உருவத்தில் பெரியவர்கள். பெண் சிலந்திகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பார்கள்.

7. நான் உங்களுக்கு எந்தவிதமான தீங்கும் செய்வதில்லை.

**புதிய சொற்கள் :**

| | | | |
|---|---|---|---|
| பூச்சி | கொசு | பாகம் | உருவம் |
| பக்கம் | முட்டை | தாடை | தீங்கு |
| முட்கள் | மெல்லிய | கூரை | நூல் |
| பிசின் | | | |

**வினுக்கள் :**

1. சிலந்தியின் உடலில் எத்தனை பாகங்கள் உள்ளன ?
2. சிலந்தி எவற்ருல் பூச்சிகளைக் குத்திக் கொல்லுகிறது?
3. சிலந்தியின் கூட்டை எங்கெங்கே பார்க்கலாம் ?
4. சிலந்தி ஏன் கூடு கட்டுகிறது ?



# 11. தீபாவளி

1. நம் நாட்டில் இந்துக்கள் பல பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள். அவற்றில் தீபாவளியும் ஒன்று. இப் பண்டிகை வருடந்தோறும் ஐப்பசி மாதத்தில் வரும்.

2. தீபாவளி என்றால் 'விளக்குகளின் வரிசை' என்று அர்த்தம். தீபாவளியன்று அதிகாலையில் நாம் எழுகிறோம். எண்ணெய் தேய்த்து நீராடுகிறோம். புதிய ஆடைகளை அணிகிறோம். பல இனிய பண்டங்களை உண்கிறோம். பட்டாசு, மத்தாப்பு முதலியவற்றைக் கொளுத்தி மகிழ்கிறோம்.

3. தீபாவளிப் பண்டிகையைப் பற்றிய கதை தெரியுமா உனக்கு? நரகாசுரன் என்ற அரக்கன்

ஒருவன் இருந்தான். அவன் கர்வம் கொண்டு மனிதர்களையும் தேவர்களையும் துன்புறுத்தி வந்தான். அவர்கள் துன்பம் பொறுக்காமல் கண்ணபிரானிடம் முறையிட்டார்கள். கண்ணபிரான் அவனைக் கொன்ருர். அவன் இறக்கும் பொழுது, இறைவனை நோக்கி, "நான் இறந்த இந்த நாளை யாவரும் ஒரு பண்டிகையாகக் கொண்டாடி மகிழவேண்டும்" என்று வரம் கேட்டான். கண்ணபிரானும் "அப்படியே வரம் தந்தேன்" என்ருர். அன்றுமுதல் அவன் இறந்த தினத்தை மக்கள் ஒரு பண்டிகையாகக் கொண்டாடி வருகின்றனர். அதுவே தீபாவளிப் பண்டிகையாகும்.

**புதிய சொற்கள் :**

| | | |
|---|---|---|
| பண்டிகை | பண்டங்கள் | தேவர் |
| வருடந்தோறும் | கொளுத்தி | முறையிடு |
| விளக்குகள் | கொடிய | கொண்டாடி |
| நீராடுதல் | அரக்கன் | வரம் |
| அணிகிருேம் | கர்வம் | தினம் |

**வினுக்கள் :**

1. தீபாவளி எப்பொழுது வரும்?
2. தீபாவளி என்ருல் என்ன பொருள்?
3. தீபாவளியன்று நாம் என்னென்ன செய்கிருேம்?
4. தீபாவளியைப் பற்றிக் கூறப்படும் கதை என்ன?



## 12. கர்வம் கூடாது

1. ஓர் ஊரில் ஒரு புலவர் இருந்தார். அவர் நிரம்பப் படித்தவர். ஆனால் மிக்க கர்வம் கொண்டவர். தன்னைவிடப் படித்தவர் வேறு ஒருவருமே இல்லை என்று எண்ணினார்.

2. ஒரு நாள் அவர் உலாவி வருவதற்காக வெளியில் சென்றார். ஒரு திடலில் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. அவைகளை ஓட்டி வந்த இடைப்பையன் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். அவன் கையில் புத்தகம் ஒன்றை வைத்துப் படித்துக்கொண்டிருந்தான்,

3. அதைப் பார்த்த புலவருக்குப் பொறுமை யாக இருந்தது. 'இடைப் பையனுக்குப் படிப்பு எதற்கு ? இடைப் பையன் என்ன படிக்கப் போகிறுன் ?' என்று நினைத்தார். அவனிடம் சென்றுர்.

4. அவனைப் பார்த்து, "பையா, என்ன படிக் கிருய்?" என்றுர். அவன் எழுந்து நின்று " எழுத் துக்களைப் படிக்கிறேன்" என்றுன். புலவர் பரி காசமாக "உனக்கு எல்லா எழுத்துக்களும் தெரியுமா?" என்றுர்.

5. புலவர் தன்னைப் பரிகசிப்பதை உணர்ந்து கொண்டான் இடைப்பையன். புல வரை நோக்கி 'ஐயா! எல்லா எழுத்துக்களையும் படித்து விட்டேன். ஒரே ஒரு எழுத்து மட்டும் தெரியவில்லை" என்றுன். புலவர் "என்ன அது?" என்றுர். பையன் தன் கையில் இருந்த கோலால் தரையில் வளைவாக எழுதினுன். புலவருக்கு அது என்ன எழுத்து என்றே தெரியவில்லை; திருதிரு வென்று விழித்தார்.

6. உடனே பையன் சிரித்தான். "கையால் எழுதுவது கையெழுத்து; கோலால் எழுதுவது கோலெழுத்து" என்றுன்.

7. புலவர் வெட்கித் தலை குனிந்தார். 'இனிக் கர்வம் கொள்வதில்லை' என்று மெதுவாகச் சொல் லிக்கொண்டே நடந்தார்.

புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| புலவர் | பொருமை | விளைவு |
| பழக்கம் | வணங்கு | விழித்தார் |
| உலாவி | பரிகாசம் | கையெழுத்து |
| வெளியில் | எழுத்து | கோலெழுத்து |
| திடல் | கோல் | வெட்கி |
| குனிந்தார் | | |

வினக்கள் :

1. புலவர் எப்படிப் பட்டவர் ?
2. புலவருக்குப் பொருமை ஏன் ஏற்பட்டது ?
3. புலவர் இடைப் பையனை நோக்கி என்ன கேட்டார்?
4. புலவரின் கர்வத்தைப் பையன் எப்படி அடக்கினன் ?
5. இக்கதையால் நீ அறியும் நீதி யாது?

# 13. தொழிலாளர்கள்



இவர் ஓர் உழவர். இவர் நிலத்தை உழுது பயிரிடுகிருர். உழவுத் தொழில் மிக மேலானது.

இவர் ஒரு தச்சர். தச்சர் மரத்திஞல் பல சாமான்களைச் செய்கிருர். உளி, வாள், சுத்தி இவை தச்சருடைய கருவிகள்.





இவர் ஒரு சேணியர். இவருக்கு எதிரில் தறி உள்ளது. அதன் மூலம் இவர் ஆடைகளை நெய்கிருர்.



இவர் ஒரு வாணியர். இவர் செக்கில் எண்ணெய் ஆட்டுகிறார். இவர் எண்ணெய், பிண்ணாக்கு முதலியவற்றை நமக்குத் தருகிறார்.



இவர் கன்னார். பாத்திர வேலை செய்பவர் இவர். நமக்கு வேண்டிய சொம்பு, குடம், தவலை, அடுக்கு முதலியவற்றை இவர் செய்கிறார்.



இவர் வண்ணார். இவர் ஆடைகளை வெளுத்துத் தருகிறார்.

இவர்களைத் தவிர இன்னும் பல தொழிலாளர்களும் இருக்கிறார்கள். இரும்பு வேலை செய்பவர் கருமார். நகைகள் செய்பவர் தட்டார். வீடு கட்டுபவர் கொத்தர். மட்பாண்டம் செய்பவர் குயவர்.

**புதிய சொற்கள் :**

| | | | |
|---|---|---|---|
| உழவர் | தச்சர் | எண்ணெய் | பஞ்சு |
| உழவு | கருவி | சமையல் | பட்டு |
| நிலம் | ஆயுதம் | குளித்தல் | ஆடை |
| பயிரிடு | உளி | சேணியர் | நகை |
| உணவு | வாள் | நெய்தல் | மட்பாண் |
| சமம் | வாணியர் | தறி | [டம் |

**வினாக்கள் :**

1. உழவர் என்ன செய்கிறார் ?
2. தச்சர் என்னென்ன செய்கிறார் ?
3. வாணியரிடத்திலிருந்து நாம் எவற்றைப் பெறுகி
4. சேணியரது தொழில் யாது ? [றோம்?

# 14. வீட்டு மிருகங்கள்



பசு மிகவும் சாதுவான மிருகம். அது நமக்குப் பால் கொடுக்கும். பசுவின் பால் மிக இனிப்பாக இருக்கும்.



எருது வண்டி இழுக்கும். அது நிலம் உழ உதவும்.

ஆடு சாதுவான மிருகம். ஆடு தழைகளை விரும்பி மேயும். ஆடுகளில் செம்மறியாடு, வெள்ளாடு என்ற வகைகள் உண்டு. ஆட்டுப்பால் உடலுக்குச் சக்தியைத் தரும். அது மருந்துக்கும் உதவும்.





குதிரை மீது சவாரி செய்யலாம். குதிரைவண்டி இழுக்கும். வேகமாய் ஓடும். குதிரை கொள்ளு, புல் இவற்றை விருப்பமுடன் தின்னும்.



நாய் நன்றியுள்ள பிராணி. நாய் வீட்டைக் காக்கும். நாய் மோப்பம் பிடிக்கும். நாய் நமக்கு நல்ல தோழன்.



பூனை பால் குடிக்கும். எலி பிடிக்கும். அதற்கு இரவில் நன்ருகக் கண் தெரியும். பூனை சத்தம் செய்யாமல் நடக்கும்.



கழுதை பொதி சுமக்கும். அது மிகவும் பொறுமையான மிருகம். கழுதை காகிதம் தின்னும்.

புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| இனிப்பு | சக்தி | மோப்பம் |
| மாடு | மருந்து | தோழன் |
| தழை | சவாரி | இரவு |
| செம்மறியாடு | கொள்ளு | நன்றி |
| வெள்ளாடு | தேசம் | |

**விஞக்கள் :**

1. எருதினல் நமக்கு என்ன உபயோகம் ?
2. ஆட்டின் பால் எதற்குப் பயன்படும் ?
3. குதிரை எவற்றை விருப்பமுடன் தின்னும் ?
4. நாய் எப்படிப்பட்ட பிராணி ?
5. பூனை எப்படி நடக்கும் ?

# 15. காட்டு மிருகங்கள்



காட்டு மிருகங்களுக்கு அரசன் சிங்கம். ஆண் சிங்கத்திற்கு மட்டுமே பிடரி மயிர் உண்டு. சிங்கம் பசித்தபோது தான் மற்ற மிருகங்களை அடித்துத் தின்னும்.



புலி மிகவும் கொடுமையான மிருகம். பசு, ஆடு முதலிய மிருகங்களைப் புலி அறைந்து கொல்லும். அதன் உடம்பில் பட்டை பட்டையாகக் கோடுகளைக் காணலாம்.



யானை மிகவும் பெரிய மிருகம். யானைக்குத் துதிக்கை என்ற உறுப்பு உண்டு. நீளமான இரண்டு தந்தங்கள் அதற்கு உண்டு. ஆண் யானைக்கு மட்டுமே தந்தங்கள் உண்டு. யானை கரும்பு, தேங்காய், தழை முதலியவற்றைத் தின்னும்.



நரி தந்திரமுள்ள பிராணி. இது காடுகளிலும், அடர்ந்த புதர்களிலும் வசிக்கும். அழுகிய பிணங்களையும், கோழிகளையும் விருப்பமுடன் தின்னும்.



கரடி மரத்தில் ஏறும். மனிதனைப் போலவே நடக்கும். புதர்களிலும், குகைகளிலும் வசிக்கும். இதன் கால்களிலும், கைகளிலும் கூர்மையான நீண்டு வளைந்த நகங்கள் இருக்கும்.

மான் காட்டில் கூட்டம் கூட்டமாய் வசிக்கும். மான் மிகவும் பயந்த தன்மையுடைய பிராணி. ஆண் மானுக்கு மட்டும் கொம்பு உண்டு. சிலர் மானை வீட்டிலும் வளர்க்கிறார்கள்.

**புதிய சொற்கள :**

| | |
|---|---|
| அரசன் | துதிக்கை |
| பிடரிமயிர் | உறுப்பு |
| கொடுமை | தந்தம் |
| வேகம் | தந்திரம் |
| அறைந்து | புதர் |
| பட்டை | பிணம் |

**விஞக்கள் :**

1. சிங்கத்தின் சிறப்பு யாது?
2. தந்தங்கள் எந்த யானைக்கு உண்டு?
3. நரி எங்கு வசிக்கும்?
4. மான் எப்படி வசிக்கும்?

---



# 16. நல்ல பையன்

1. இவன் பெயர் குமரன். குமரன் மிகவும் நல்ல பையன். இவன் இரண்டாம் வகுப்பில் படிக்கிருன்.

2. இவன் அதிகாலேயில் எழுந்திருப்பான். உடனே பல் தேய்ப்பான். குளிர்ந்த நீரில் குளிப்பான். தூய ஆடைகளே உடுத்திக்கொள்வான்.

3. சிறிது நேரம் கடவுளேத் தொழுவான். பெற்ருேரை வணங்குவான். பிறகு பாடங்களேப் படிப்பான்.

4. குறித்த நேரத்தில் சாப்பிடுவான். பிறகு பள்ளிக்குச் செல்வான். நேரங்கழித்துப் பள்ளிக்குச் செல்லமாட்டான்.

5. பள்ளியில் பாடங்களே நன்கு கவனிப்பான். ஆசிரியர் கொடுத்த வேலேயை நன்ருகச்

செய்வான். நண்பர்களுடன் அன்போடு பழகு வான்.

6. மாலையில் பள்ளிக்கூடம் விட்டதும் நண் பர்களுடன் விளையாடுவான். இருட்டுக்குமுன் வீடு சேர்வான். கைகால்களைக் கழுவிக்கொள்வான். பாடங்களைப் படிப்பான். குறித்த நேரத்தில் சாப் பிட்டபின் தூங்குவான்.

7. வீட்டில் பெற்றோர்க்கு அடங்கி நடப் பான். அவர்கள் இட்ட வேலைகளை மகிழ்வோடு செய்வான். எப்பொழுதும் உண்மையே பேசு வான்.

8. குமரன் வீட்டாருக்கும் "நல்லபிள்ளை"யாக இருக்கிறான். ஊராருக்கும் "நல்ல பிள்ளை" யாக இருக்கிறான்.

"நல்லவனாய் இரு"

**புதிய சொற்கள் :**

| | | | |
|---|---|---|---|
| வகுப்பு | உடுத்தி | ஆசிரியர் | கருவி |
| அதிகாலை | வணங்கு | அன்பு | உண்மை |
| தேய்ப்பான் | பெற்றோர் | கவனம் | மகிழ்வு |
| குளிர்ந்த நீர் | பாடங்கள் | விளையாடு | ஊரார் |
| குளிப்பான் | நேரம் | காலை | மாலை |
| தூய ஆடை | பள்ளி | வீட்டார் | |

**வினாக்கள் :**

1. குமரன் எப்பொழுது எழுவான்? எழுந்தவுடன் அவன் என்னென்ன செய்வான்?
2. குமரன் பள்ளிக்கூடத்தில் எப்படி நடந்து கொள்வான்?
3. குமரன் மாலையில் என்ன செய்வான்?
4. அவனிடமுள்ள நல்ல குணங்கள் யாவை?



# 17. நிலாப் பாட்டு.

1. வட்ட வட்ட வெண்ணிலவே
   வானில் தோன்றிடும் வெண்ணிலவே
   கிட்டே வந்தே என்னிடமே
   கேளிக் கைகள் காட்டிடுவாய்

2. வளர்வாய் தேய்வாய் வெண்ணிலவே
   ஒளிர்வாய் ஒளிவாய் வெண்ணிலவே
   தளர்வால் மனதில் துன்பங்கள்
   கண்டால் மகிழ்ச்சி தந்திடுவாய்

3. உன்னைக் கண்டால் வெண்ணிலவே
உள்ளம் துள்ளுது வெண்ணிலவே
சின்னஞ் சிறிய கைகொண்டே
சிறுவன் அழைத்தால் வாராயோ?

4. வெண்ணெய்ப் பந்தோ வெண்ணிலவே
வெள்ளைத் தோசையோ உன்னுருவம்
தண்ணென நிலவைப் பொழிந்திடுவாய்
தளர்வை மனதில் நீக்கிடுவாய்

5. சிறிது சிறிதாய் வளர்ந்திடுவாய்
செகத்தில் ஒளியைப் பரப்பிடுவாய்
அரவு வரினும் அஞ்சிடாமல்
அருமை நிலவைப் பொழிந்திடுவாய்.

—நந்திதாசன்

புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| நிலவு | தளர்வு | பொழிந்திடுவாய் |
| வான் | துள்ளல் | செகம் |
| கேளிக்கை | தண் | அரவு |
| ஒளிர்வாய் | ஒளிவாய் | அருமை |

வினாக்கள் :

1. சந்திரனின் இயல்புகள் யாவை?
2. சந்திரனின் உருவம் எப்படி உள்ளது?
3. நிலவு எப்படி இருக்கிறது?



# 18 ஆகாய விமானம்

1. மேலே உள்ள படத்தைப் பாருங்கள். இது ஆகாய விமானத்தின் படம். ஆகாய விமானங்களில் பல வகைகள் உண்டு. ஆகாயத்தில் பறந்து செல்வதால் இதற்கு 'ஆகாய விமானம்' என்று பெயர்.

2. ஆகாய விமானம் வெகு வேகமாகப் பறக்கும். இதன் முன்னால் ஒரு காற்றாடி இருக்கிறது. அது விமானம் பறக்கும் பொழுது வேகமாகச் சுழலும். அவ்வாறு சுழலும்பொழுது பெருஞ்சத்தம் உண்டாகிறது.

3. இதற்கு மூன்று சக்கரங்கள் இருக்கின்றன. முன்புறத்தில் இரண்டு பெரிய சக்கரங்கள் உள்ளன. பின்புறத்தில் ஒரு சிறிய சக்கரம் உள்ளது. விமானம் பறப்பதற்கு முன்பு தரையில் சிறிது தூரம் ஓடும்; பின்பு மேலே எழும்பிப் பறக்கும்.

4. விமானம் மிக இலேசான உலோகத்தால் செய்யப்படுகிறது. இது "பெட்ரோல்" என்ற எண்ணெயால் ஓட்டப்படுகிறது.

5. விமானத்தை ஓட்டுபவருக்கு "விமானி" என்று பெயர். ஒவ்வொரு விமானத்திற்கும் ஒரு விமானி இருப்பார். சில விமானங்களில் ஒருவருக்கு மேலும் இருப்பார்கள்.

6. விமானத்தில் மக்கள் பிரயாணம் செய்கின்றனர்; பொருள்களையும் பல இடங்களுக்கு அனுப்புகின்றனர். தபால்களும் இதன் மூலம் அனுப்பப்படுகின்றன.



ரைட் சகோதரர்கள்

7. ஆகாய விமானம் சண்டைக் காலங்களிலும் உபயோகமாக இருக்கும்.

8. ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்தவர் ரைட் சகோதரர்கள் ஆவர்.

புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| ஆகாய விமானம் | இலேசு | பிரயாணம் |
| பலவிதம் | உலோகம் | தபால்கள் |
| வேகம் | பெட்ரோல் | சண்டை |
| காற்ருடி | தரை | உபயோகம் |
| சத்தம் | எழும்பி | கண்டுபிடித்தல் |
| சுழலும் | விமானி | மக்கள் |

விஞக்கள் :

1. ஆகாய விமானம் என்று பெயர் வரக் காரணம் என்ன?
2. ஆகாய விமானத்தின் முன்புறம் உள்ளது எது?
3. விமானம் எதஞல் ஓட்டப்படுகிறது?
4. ஆகாய விமானத்தின் உபயோகங்கள் யாவை?
5. ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்தவர் யார்?



# 19. பொறாமைக் கிளி

1. ஒரு மரத்தடியில் மயில் ஒன்று இருந்தது. அது தன் அழகான தோகையை விரித்து ஆடிக் கொண்டு இருந்தது. அதன் ஆட்டத்தைக் கண்டு மற்றப் பறவைகள் எல்லாம் மகிழ்ந்தன; மயிலைப் புகழ்ந்தன.

2. மயிலின் ஆட்டத்துக்கு ஏற்றவாறு குயில் ஒன்று கூவிக்கொண்டிருந்தது. அது மரக் கிளை யில் உட்கார்ந்து இருந்தது. அப்பொழுது அத னருகில் ஒரு கிளி வந்து அமர்ந்தது. அது மிகவும் கர்வம் கொண்ட கிளி. தன்னைப் போல எவராலும் பேசமுடியாது என்று எண்ணியது. மயில் ஆடுவதைக் கண்டு மற்றப் பறவைகளெல் லாம் புகழ்ந்து பேசுவது அதற்குப் பிடிக்கவில்லை.

அதனால் தன் மனத்தில் பொறுமை கொண்டு மயிலினிடம் சென்றது.

3. மயிலைப் பார்த்து: "நீ மிகவும் அழகாக இருக்கிறாய்; நன்றாக ஆடுகிறாய் என்று கர்வம் கொள்ளாதே; நானும் அழகாகத்தான் இருக்கிறேன். என்னைப்போல் நீ இனிமையாகப் பேசுவாயா?" என்று பரிகாசமாகக் கேட்டது.

4. உடனே மயில் அதனைப் பார்த்து, "ஒவ்வொருவருக்கும் ஒரு காரியம் எளிதாக இருக்கும். ஆதலால் நீ கர்வம் கொள்ளாதே" என்றது.

5. அப்பொழுது அங்கு ஒரு பூனை வந்தது. பூனையைக் கண்டதும் கிளி 'கீச் கீச்' என்று கத்திக் கொண்டே பறந்து விட்டது. பிள்ளைகளே! இதனால் "பேச்சுப் பேச்சு என்னும் பெரும் பூனை வந்தால், கீச்சுக் கீச்சு என்னும் கிளி" என்ற பழமொழியை அறிகிறோம்.

"கர்வம் கொள்ளேல்"

புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| ஆட்டம் | காரியம் | புகழ்ந்தன |
| பறந்து | ஏற்றவாறு | பேச்சு |
| அருகில் | பழமொழி | பிடிக்கவில்லை |

வினாக்கள் :

1. மரத்தடியில் மயில் என்ன செய்துகொண்டிருந்தது?
2. கிளி மயிலிடம் ஏன் பொறுமை கொண்டது?
3. கிளி மயிலிடம் பரிகாசமாக என்ன கேட்டது?
4. கிளி பறந்தோடிவிடக் காரணம் என்ன?

# 20. சுவைகள்

1. நாம் நாக்கினால் சுவைகளை அறிகிறோம். சுவைகள் ஆறு வகைப்படும். அவற்றை "அறு சுவை" என்று கூறுவர்.

2. நாம் கரும்பைச் சுவைக்கிறோம். கரும்பின் சாறு மிகவும் தித்திப்பாக இருக்கும். ஆதலால் நாம் கரும்பை விரும்பித் தின்கிறோம்.

3. நாம் பாகற்காயைக் கறி சமைக்கிறோம். பாகற்காய் கசப்பாக இருக்கும்.

4. எலுமிச்சம்பழத்தை நாம் சமையலுக்கு உபயோகிக்கிறோம். அதன் சாற்றோடு நீரைக் கலந்து, சர்க்கரை சேர்த்துக் குடிக்கிறோம். எலுமிச்சம் பழத்தின் சாறு புளிப்பாக இருக்கும்.

5. ஒரு பச்சை மிளகாயை எடுத்துக் கடித்துப் பார்! எப்படி இருக்கிறது? நாவில் சுரீரென உறைக்கிறது. மிளகாய் காரமாய் இருக்கும்.

6. நாம் விரும்பி உட்கொள்ளும் ஊறுகாய் களில் மாவடுவும் ஒன்று. மாவடுவைக் கடித்தால் துவர்ப்பதை அறியலாம்.

7. உணவுப் பொருள்களில் அவசியமானது உப்பு. உப்பின் சுவை உவர்ப்பு ஆகும்.

8. அறுசுவைகளாவன : தித்திப்பு, கசப்பு, புளிப்பு, கார்ப்பு (காரம்), உவர்ப்பு, துவர்ப்பு என்பனவாம்.

புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| சுவை | தித்திப்பு | காரம் |
| கறி | கசப்பு | ஊறுகாய் |
| தின்கிறோம் | சர்க்கரை | மாவடு |
| சாறு | புளிப்பு | துவர்ப்பு |
| சமைக்கிறோம் | சுரீரென உறைக்கிறது | உவர்ப்பு |

வினாக்கள் :

1. நாம் எதனால் சுவைகளை அறிகிறோம் ?
2. நாம் கரும்பை விரும்பித் தின்பது ஏன்?
3. எலுமிச்சம் பழத்தை எப்படி உபயோகிக்கிறோம்?
4. அறுசுவைகள் யாவை?



# 21. தேகப் பயிற்சி

1. நாம் தினந்தோறும் தேகப்பயிற்சி செய்ய வேண்டும். தேகப்பயிற்சி செய்வதால் நம்முடைய உடலுக்குப் பலம் ஏற்படுகிறது. சுறுசுறுப்பு உண்டாகின்றது. இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது.

2. தேகப் பயிற்சியை மாலை வேளையில் செய்வதே நல்லது. சிலர் காலை வேளையிலும் செய்கிறார்கள். சாப்பிட்டவுடன் தேகப் பயிற்சி செய்யக்கூடாது. சாப்பிட்டு ஆறுமணி நேரம் ஆன பிறகே தேகப் பயிற்சி செய்யவேண்டும்.

3. நாம் தேகப்பயிற்சியாக ஓடுதல், விளையாடுதல், தாண்டுதல், குதித்தல் முதலியவற்றைச் செய்யலாம். பெரிய பிள்ளைகள் பந்தாடுதல், நீந்துதல், ஓடித்தாண்டுதல் முதலிய பயிற்சி

களைச் செய்கிறார்கள். வயதான பெரியவர்கள் நெடுந்தூரம் நடந்து செல்கிறார்கள். அதுவே அவர்களுக்கு ஏற்ற உடற்பயிற்சி ஆகும்.

4. உடற் பயிற்சி செய்தவுடன் குளிக்கக் கூடாது. ஏனெனில் உடற்பயிற்சி செய்தவுடன் நம் உடலிலிருந்து வியர்வை வெளியாகின்றது. வியர்வையோடு குளித்தால் உடலுக்குக் கெடுதி வரும்.

5. உடற்பயிற்சி செய்வதால் நமக்கு நோய் களே ஏற்படாது. நோய் இல்லாமல் நாம் வாழ வேண்டும். நோயற்ற வாழ்க்கையே குறைவற்ற செல்வ வாழ்க்கை ஆகும்.

6. தினந்தோறும் அதிகாலையில் எழுந் திருக்க வேண்டும். குறித்த வேளையில் சாப்பிட வேண்டும். மாலையில் தவறாமல் தேகப்பயிற்சி செய்யவேண்டும். காலையிலும், மாலையிலும் சிறிது தூரம் உலாவ வேண்டும்.

"தேகப் பயிற்சி செய்"

புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| தினந்தோறும் | சுறுசுறுப்பு | நோய்கள் |
| தேகப்பயிற்சி | தாண்டுதல் | குறைவு |
| பலம் | தூரம் | செல்வம் |
| இரத்தம் | வியர்வை | தவறாமல் |
| வேளை | | |

வினாக்கள் :

1. தேகப் பயிற்சி செய்வதால் ஏற்படும் நன்மைகள் யாவை?
2. நாம் எப்பொழுது தேகப்பயிற்சி செய்ய வேண்டும்?
3. உடற்பயிற்சி செய்தவுடன் குளிக்கக் கூடாது. ஏன்?
4. குறைவற்ற செல்வ வாழ்க்கை எது?

# 22. முத்துப் புலவர்

1. பல ஆண்டுகளுக்குமுன் பாண்டிய நாட்டில் ஒரு புலவர் இருந்தார். அவர் பெயர் முத்துப்புலவர் என்பதாகும். அவர் நிரம்பத் தமிழ் நூல்களை யெல்லாம் கற்றுப் புலவராக விளங்கினர். அவர் மிகவும் வேடிக்கையாகப் பேசுவார்.

2. எட்டையபுர மன்னன் அவர் பெருமைகளைக் கேள்விப்பட்டான். உடனே ஏவலரை அனுப்பி அவரை அழைத்துவரச் செய்தான். அவரைத் தன் அவைக்களத்தில் புலவராக நியமித்தான்.

3. ஒரு நாள் புலவர் அரசனுடன் பேசிக்கொண்டிருந்தார். முத்துப் புலவர் கரு நிறம் உடையவர். ஆதலால் அரசன் "நீர் காக்கையைப் போன்றவர்" என்ருன். மன்னனும் கரு நிறம் உடையவன்தான். ஆகவே புலவர் அவனை நோக்கி "நீரும் அண்டங்காக்கை தானே" என்ருர்.

4. அதைக்கேட்ட அரசன் வருந்தினன். புலவர் அதை உணர்ந்தார். மன்னனிடம் "அண்டம் என்ருல் உலகம். காக்கை என்ருல் காப்பாற்றுதல் என்று பொருள். நான் உங்களை உலகைக் காப்பவர் என்றல்லவா சொன்னேன்" என்ருர்.

5. அதைக்கேட்ட மன்னன் மகிழ்ந்தான். அவருக்கு வேண்டிய வெகுமதிகளை அளித்தான்.

புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| ஆண்டு | அவைக்களம் | வருத்தம் |
| புலவர் | வேடிக்கை | அண்டம் |
| நிரம்ப | கருநிறம் | உலகம் |
| நூல்கள் | ஒருநாள் | காப்பாற்றுதல் |
| ஆண்ட | அண்டங்காக்கை | வெகுமதி |
| ஏவலர் | | |

வினாக்கள் :

1. முத்துப்புலவரை மன்னன் அழைக்கக் காரணம் என்ன ?
2. முத்துப் புலவர் எப்படிப் பேசுவார் ?
3. மன்னனுக்கு மன வருத்தம் ஏன் ஏற்பட்டது?
4. புலவர் மன்னனுடைய வருத்தத்தை எவ்வாறு போக்கினார்?

# 23. கோழிப் பாட்டு

கோழீ ! கோழீ ! வா வா
கொக் கோ கோ என்று வா
கோழீ ! ஓடி வா வா
கொண்டைப் பூவைக் கொண்டுவா

காலை கூவி எங்களைக்
கட்டில் விட்டுஎழுப்புவாய்
வேலை செய்ய ஏவுவாய்
வெற்றி கொண்ட கோழியே !



கோழீ ! கோழீ ! வா வா
கூரை விட்டு இறங்கிவா
கோழீ ! முட்டை இடவா
கூட்டில் அடை காக்க வா

பெட்டைக் கோழி ! வா வா
பிள்ளைகளைக் கூட்டி வா
குட்டை நெல்லைக் கொட்டினேன்
கொத்திக் கொத்தித் தின்னவா



வஞ்சமாய்ப் பருந்ததோ
  வானில் வட்டம் போடுது !
குஞ்சணைத்துக் காப்பாயோ !
  கூட்டில் கொண்டு சேர்ப்பாயோ!

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

குட்டை = சிறு கூடை

**புதிய சொற்கள்:**

ஏவுவாய் பெட்டை அணைத்து வெற்றி முட்டை சேர்ப்பாய் கூரை வஞ்சம் வான் அடைகாக்க பருந்து

**வினாக்கள் :**

1. சேவல் நமக்கு எப்படி உதவுகிறது?
2. பெட்டை என்னென்ன செயல்களைச் செய்கிறது?



## 24. தோட்ட வேலைகள்

1. இது எங்கள் பாடசாலைத் தோட்டம். தோட்டத்தில் மா, வாழை போன்ற மரங்கள் உண்டு. மிளகாய், கத்திரி, வெண்டை போன்ற காய்கறிச் செடிகள் உண்டு. ரோஜா, மல்லிகை, சாமந்தி முதலிய மலர்ச் செடிகளும் உண்டு.

2. நாங்கள் நாள்தோறும் மாலையில் தோட்ட வேலை செய்வோம். நாங்கள் சிறியவர்கள். ஆதலால் நாங்கள் எளிய வேலைகளையே செய்வோம்.

3. நாங்கள் பாத்திகளில் இருக்கும் புல் பூண்டுகளை எடுத்து அவற்றைக் குப்பைக் குழியில் போடுவோம். பூவாளியால் கீரைப் பாத்திக்குத் தண்ணீர் வார்ப்போம்.

கொத்துதல், நீர் இறைத்தல், களை எடுத்தல் வேலைகளைப் பெரியவர்கள் செய்வார்கள்.

4. தோட்ட வேலைகளுக்கு வேண்டிய மண் வெட்டி, களைக்கொட்டு, கடப்பாரை, ஏற்றச்சால் போன்ற கருவிகள் உள்ளன. சிறிய வாளிகளும், பெரிய வாளிகளும் உள்ளன. நாங்கள் அவற்றை நன்கு கையாளுவோம்.

5. நாங்கள் தோட்டத்தில் அங்கும் இங்கும் ஓடமாட்டோம். பூக்களையோ, காய்களையோ பறிக்கமாட்டோம். தோட்டவேலை எங்களுக்குச் சுறுசுறுப்பும், மகிழ்ச்சியும் அளிக்கிறது. தோட்ட வேலையும் ஒருவகை உடற்பயிற்சியே ஆகும்.

புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| தோட்டம் | பாத்திகள் | கொத்துதல் | களைக்கொட்டு |
| சாமந்தி | பூண்டு | நீர் இறைத்தல் | கடபபாரை |
| மல்லிகை | குப்பைக் குழி | களை எடுத்தல் | ஏற்றச்சால் |
| சுறுசுறுப்பு | கையாளுவோம் | பெரியவர் | வாளிகள் |
| பூவாளி | வார்ப்போம் | | |

வினாக்கள் :

1. தோட்டத்தில் உள்ளவை யாவை?
2. தோட்டத்தில் சிறுவர்களின் வேலை என்ன?
3. பெரியவர்கள் என்ன செய்வார்கள்?
4. தோட்ட வேலைகளுக்கு ஏற்ற கருவிகள் யாவை?



# 25. கரடியும் அழகியும்

1. ஒரு அரசனுக்கு மூன்று பெண்கள் இருந்தார்கள். அவர்களில்மூன்ருவதுபெண்ணே மிகுந்த அழகி. தந்தையிடம் அதிக அன்புடையவள்.

2. ஒரு நாள் அரசன் காட்டிற்கு வேட்டை யாடச் சென்ருன். காட்டின் நடுவில் ஒரு தோட்டம் இருந்தது. அங்கே பல அழகிய பூக்கள் இருந் தன. அரசன் ஒரு ரோஜாவைப் பறித்தான். அப்பொழுது திடீரென ஒரு கரடி அங்குத் தோன் றியது. "இத்தோட்டம் எனக்குச் சொந்தமானது. என் உத்திரவின்றி நீ பூவைப் பறித்தாய். உன்னே இப்போது கொல்லுகிறேன்" என்றது.

3. அரசன் தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். கரடி "உன் மகளை எனக்குக் கல்யாணம் செய்து கொடுத்தால் உன்னை விட்டுவிடுகிறேன்" என்றது. அதைக்கேட்ட அரசன் வருந்தினான். வேறு வழியில்லாமல் அதற்குச் சம்மதித்து அரண்மனைக்குத் திரும்பினான்.

4. தந்தையின் முகம் வாட்டம் அடைந்திருப்பதை மூன்று பெண்களும் கண்டனர். மூவரும் அரசனிடம் வந்து 'தந்தையே! தாங்கள் வருந்தக் காரணம் என்ன?" என்று கேட்டனர். அரசன் தோட்டத்தில் நடந்த விவரங்களைச் சொன்னான். முதல் இரண்டு பெண்களும் கரடியை மணக்க விரும்பவில்லை. ஆனால் மூன்றும் மகள் கரடியை மணக்க ஒப்புக்கொண்டாள். அரசன் மகிழ்ந்தான். மகளோடு கரடியின் இருப்பிடம் வந்தான். மகளைக் கரடியிடம் ஒப்படைத்தான்.

5. அப்பெண், கரடிக்குப் பல உதவிகளைச் செய்தாள். ஒரு நாள் கரடி அவளிடம் வந்தது. "என்னை அன்போடு நடத்துகிறாய். எனக்கு அன்போடு ஒரு முத்தம் கொடு" என்றது. அந்தப் பெண்ணும் அப்படியே செய்தாள். என்ன ஆச்சரியம்! கரடியைக் காணவில்லை: அந்த இடத்தில் ஒரு அழகிய அரசகுமாரன் தோன்றினான். 'நான் முன்பு கரடியாக இருந்தேன். நீ அன்போடு முத்தமிட்டதால் உண்மை உருவம் பெற்றேன். இப்பொழுது உன்னை மணந்து கொள்கிறேன்" என்றான்.

6. பின்பு இருவரும் மணம் செய்துகொண்டு சுகமாக வாழ்ந்தனர்.

**புதிய சொற்கள் :**

| | | |
|---|---|---|
| அதிகம் | தவறு | விரும்பு |
| அழகி | மன்னிப்பு | உதவி |
| வேட்டை | வாட்டம் | முத்தம் |
| திமிர் | விவரம் | ஆச்சரியம் |
| சொந்தம் | பரிதாபம் | அரசகுமாரன் |
| உத்திரவு | ஒப்புக்கொள்ளல் | தோன்றினான் |
| அரண்மனை | உருவம் | மணம் |
| சுகம் | | |

**வினாக்கள் :**

1. அரசனுக்கு எத்தனை பெண்கள் இருந்தனர்?
2. கரடி அரசனிடம் என்ன சொல்லிற்று?
3. அரசன் வருந்தக் காரணம் என்ன?
4. தந்தையின் வார்த்தையை யார், எப்படிக் காப்பாற்றினாள்?
5. கரடி எவ்வாறு மாறியது?

---




## 26. புதிய நாணயங்கள்

1. பிள்ளைகளே! நமது இந்திய அரசாங்கத்தார் சில புதிய நாணயங்களை வெளியிட்டுள்ளனர். இப்புதிய நாணயங்கள் 1957-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் புழக்கத்திற்கு வந்தன. அவைகளைப் பற்றி நாம் தெரிந்துகொள்வோம்.

2. புதிய நாணயம் 'புதிய காசு' எனத் தமிழிலும், 'நயா பைசா' என்று இந்தியிலும் சொல்லப்படுகிறது.

3. நாம் இப்பொழுது பழைய நாணயங்களையும் புதிய நாணயங்களையும் கலந்து புழங்கி வருகிறோம். பழைய நாணயங்களுக்குச் சமமாகப் புதிய நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

4. ஒரு நயா பைசாவிலிருந்து நூறு நயே பைசே வரை நாணயங்கள் உள்ளன.

5. ஒரு ரூபாய்க்கு நூறு புதிய காசுகள். அரை ரூபாய்க்கு ஐம்பது புதிய காசுகள். கால் ரூபாய்க்கு இருபத்தைந்து புதிய காசுகள்.

6. இப்பொழுது ஒரு நயா பைசா, இரண்டு நயே பைசே, ஐந்து நயே பைசே, பத்து நயே பைசே நாணயங்கள் வெளிவந்துள்ளன.

7. ஒரு நயா பைசா 'செம்பு' என்ற உலோகத்தினுல் செய்யப்பட்டுள்ளது. மற்றவை 'நிக்கல்' என்ற உலோகத்தால் ஆனவை.

8. ஒரு புதிய காசு நாணயம் சிறிதாயும், வட்டமாயும் இருக்கிறது. இரண்டு நயே பைசே நாணயமும், பத்து நயே பைசே நாணயமும் ஓரத்தில் வளைவுகளோடு உள்ளன. ஐந்து நயே பைசே நாணயம் சதுரமாக உள்ளது.

**புதிய சொற்கள் :**

| | | |
|---|---|---|
| அரசாங்கம் | பழைய | செம்பு |
| நாணயங்கள் | இந்தி | நிக்கல் |
| புதிய | கலந்து | சதுரம் |
| புழக்கம் | சமம் | வளைவுகள் |
| காசு | நயாபைசா | உலோகம் |
| தமிழ் | நயேபைசே | ஓரம் |

**வினுக்கள் :**

1. புதிய நாணயங்கள் எப்பொழுது வெளிவந்தன?
2. புதிய நாணயம் தமிழிலும் இந்தியிலும் எவ்வாறு சொல்லப்படுகிறது?
3. இப்பொழுது நாணயங்களை நாம் எப்படிப் புழங்கி வருகிறோம்?
4. ஒரு ரூபாய்க்கு எத்தனை புதிய காசுகள்?
5. புதிய நாணயங்கள் எந்தெந்த உலோகங்களால் செய்யப்பட்டுள்ளவை?



# 27. குரங்கும் பூனையும்

காட்சி 1

[ஓரிடத்திலிருந்து அப்பம் ஒன்றை இரண்டு பூனைகள் திருடிக்கொண்டு வருகின்றன.]

வெள்ளைப் பூனை : தம்பி! இந்த அப்பத்தை நான்தான் முதலில் பார்த்தேன். ஆதலால் நான்தான் இதனைப் பங்கு பிரிப்பேன்.

கருப்புப் பூனை: அண்ணா! நீ சொல்வது சரி. ஆனால் நான்தானே இதைத் திருடிக்கொண்டு வந்தேன். ஆகையால் நான்தான் இதைப் பங்கு பிரிப்பேன்.

வெள்ளைப் பூனை: தம்பி! நீயோ சிறியவன். பெரியோர் சொல்வதைக் கேட்க வேண்டாமா?

கருப்புப் பூனை: அண்ணா! நீரோ பெரியவர். சிறியவர்களின் மனமறிந்து நடக்கவேண்டாமா?

வெள்ளைப் பூனை: பார்த்துச் சொன்னதால் தானே அப்பம் கிடைத்தது!

கருப்புப் பூனை: நான் எடுத்து வராவிட்டால் எப்படிக் கிடைக்குமாம்!

வெள்ளைப் பூனை: நமக்குள் சண்டை எதற்கு? இருவருமே பங்கு பிரித்துக்கொள்வோம்.

கருப்புப் பூனை: வேண்டாம், வேண்டாம். அதோ மரத்தடியில் குரங்கார் உட்கார்ந்திருக்கிறார். அவரிடம் போவோம்.

காட்சி 2

[மரத்தடியிலிருந்த குரங்கினிடம் இரண்டு பூனைகளும் அப்பத்தோடு வருகின்றன.]

இரு பூனைகள்: ஐயா! குரங்காரே! வணக்கம் செலுத்துகிறோம்.

குரங்கு: சிறுவர்களே! என்ன செய்தி? எங்கே வந்தீர்கள்?

வெள்ளைப் பூனை : உங்களிடம் ஒரு வழக்கைக் கொண்டு வந்திருக்கிறோம். அதைத் தீர்த்து வைக்கவேண்டும்.

குரங்கு : ஓகோ! அப்படியா! என்ன வழக்கு அது?

கருப்புப் பூனை : நானும் இவரும் சேர்ந்து ஒரு அப்பம் திருடினோம். அதைச் சரிபாதியாகப் பிரித்துக் கொடுக்கவேண்டும்.

குரங்கு : பூ! இவ்வளவுதானா! அப்பத்தைத் தாருங்கள்.

[பூனைகள் அப்பத்தைக் கொடுக்கின்றன. குரங்கு அதை விண்டு சிறிது சிறிதாகத் தராசில் நிறுக்கிறது. பிறகு முழுவதையும் தின்றுவிடுகிறது.]

## காட்சி 3

கருப்புப் பூனை : அண்ணா! மோசம் போய் விட்டோம். இனி என்ன செய்வது?

வெள்ளைப் பூனை : தம்பி! அப்போதே சொன்னேன். 'நாமே பிரித்து எடுத்துக் கொள்வோம்' என்று. கேட்டாயா நீ! பிடிவாதம் செய்தாய்! அதனால் கிடைத்ததையும் இழந்துவிட்டோம்.

கருப்புப் பூனை : ஆமாம் அண்ணா! நான் இனி மேல் பிடிவாதம் செய்யவே மாட்டேன். வீணாகச் சண்டை செய்யவும் மாட்டேன். என்னை மன்னித்து விடுங்கள், அண்ணா.

**புதிய சொற்கள் :**

| | | | |
|---|---|---|---|
| அப்பம் | எடுத்து | தீர்த்து | இழந்து |
| பங்கு | சண்டை | சரிபாதி | கிடைத்தது |
| பெரியோர் | வணக்கம் | விண்டு | வீணுக |
| மனம் | வழக்கு | மோசம் | மன்னிப்பு |

**விஞக்கள் :**

1. பூனைகள் எதற்காகச் சண்டை செய்தன ?
2. பூனைகள் எங்கு போயின ?
3. குரங்கு என்ன செய்தது ?
4. இதனுல் நீ அறியும் நீதி யாது ?



## 28. நரி

தான தான தான தான தான தானனை
தான தான தான தான தான தானனை

1. நரியைப்பார்! நரியைப்பார்! நாயைப்போன்றது
திருடனைப்போல் விழிக்குதுபார்! தீயசெயலது!

2. இதனுடைய வாலதுதான் என்ன நீளம் பார்!
இதன் கால்களில் நகங்கள் என்ன கூர்மை பார்!

3. காட்டில் பொந்தில் வசிக்கும் இரவில் கனத்த
இருளிலே
நாட்டில் ஆடு கோழி குஞ்சை நன்கு திருடுமே

4. புதைத்த பிணத்தை மோப்பம் பிடித்துத்
தோண்டி எடுத்துண்ணும்
வதைக்க முடியா விலங்கு வந்தால் வஞ்சனை
செய்யும்

5. நரியைப்பார் நரியைப் பார்! நாயைப் போன்றது
திருடனைப்போல் விழிக்குதுபார்! தீயசெயலது!



# 29. அற்பம் அற்பம் அல்ல

(இந்த மாம்பழம் இனிய ஜாதியாய்—என்ற மெட்டு)

சுண்டெலி : தூங்கும் சிங்கம்மேல் துள்ளி ஓடுவேன்
விரைந்து தாவியே விளையாடுவேன்
(சிங்கம் விழித்துக்கொண்டு)

சிங்கம் : அற்பனே ! துயில் அகற்றினையடா !
இப்போ காலினுல் இதோ நசுக்குகிறேன்

சுண் : தெய்வமே ! அற்பன் தெரியாமற் செய்தேன்
அய்யோ நசுக்கில்உம் அடிக்கிறையாமே
தயவு செய்தென்னைச் சாமி ! விட்டிடும்
இயன்ற பதிலதை யென்ருவது செய்வேன்

சிங் : அற்பனே ! உன்னைக் கொல்வதால் இங்கு
ஆவ தென்னடா தப்பியோடிடு

(சில நாட்கள் கழித்துச் சிங்கம் வலையில் அகப்பட்டுக் கொண்டது.)

சிங் : அய்யோ என் செய்வேன்? அருவலைப்பட்டேன்
அய்யோ இவ்வலை அகற்றுவாருண்டோ

சுண் : இந்தக் குரலொலி என்னை விட்டிட்ட
அந்தச் சிங்கத்தின் குரலொலி போலும்
இந்தப் பக்கந்தான் இருந்து கேட்குது
நன்று ஓடியே பார்த்து நான் வரேன்

(சுண்டெலி வந்து சிங்கம் வலையில் அகப்பட்டிருப்பதைப் பார்த்தது. விரைந்து ஓடி வலையைப் பற்களால் கடித்து அறுத்து விட்டது.)

சிங் : அற்பமா யும்மை அறியாதெண்ணினேன்
இப்போதுயிர் தந்தீர் என்னை மன்னிப்பீர் !

சுண் : சிங்க ராசரே ! சிறுதுரும் புமே
பல்லைக் குத்தவே பாங்காய் உதவுமே.

# 30. நான் யார்

(கும்மி மெட்டு)

1. வேரில் முதன்முதல் தோன்றிடுவேன்—பெரு
வயிற்றில் பலபல சுளையுடையேன்
கூரிய முட்களால் விளங்கிடுவேன்—இந்தக்
குவலயத் தாரினை மகிழ்த்திடுவேன்
நான் யார்?—பலாப்பழம்

2. செந்நிறப் பூக்களைப் பூத்திடுவேன்—மிகச்
சிவந்திடும் முத்துக்கள் பலவுடையேன்
செம்பின் வடிவினைக் கொண்டிடுவேன்—என்னைச்
செம்பிற்குள் கெம்பெனச் சொல்லிடுவார்
நான் யார்?—மாதுளை

3. நீர் மிகு குளத்தினில் நிறைந்திருப்பேன்—நன்ருய்
நித்தமும் இரவினில் பூத்திடுவேன்
பாரினில் என்னை மலர்ந்திடுவோன்—பனி
மாமதி என்னும் மணாளன்தான்
நான் யார்?—அல்லிப்பூ

4. நீரின் கரைகளில் வாழ்ந்திடுவேன்—உடல்
நிரம்பவும் முட்களைக் கொண்டிடுவேன்
பாரினில் எந்தனைப் போற்றியே யாவரும்
பண்புடன் கூந்தலில் சூடிடுவார்
நான் யார்?—[illegible]

---

சென்னை-600 008
135564

1292
792
392
H.6.65/C